Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 298 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.4**
Defence
Court

| | |
|---|---|
| Name | சேகர் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 16th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday 16th day of September 2025.**

**2 வது எதிரி இளவர். 5 மற்றும் 6 எதிரிகள் இறப்பு காரணமாக குற்றம் அற்றுவிட்டது. 1 மற்றும் 3 வது எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 4 வது எதிரி மட்டும் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் வடலூரில் குடியிருக்கிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. காவல் நிலையம் அருகே நின்றுகொண்டு இருந்தேன். காவலர்கள் கேட்டுக்கொண்டதற்கு இனங்க கையொப்பம் போட்டேன். காண்பிக்கப்பட்ட நான்கு கையொப்பங்கள் என்னுடையது. பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் இரத்த கறை படித்த சிமெண்ட் காரை கைபற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் மற்றும் 02.06.2017 அன்று 1வது எதிரி அருள்பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மற்றும் TVS XL MOPED கைபற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் அதசாஆ 1 முதல் 4 ஆகும். எனக்கு எந்த விவரமும் தெரியாது.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**:

கடந்த 18.05.2017 அன்று காலை நானும் விஜயன் என்பவரும் டீ குடிக்க வடலூர் மெயின் ரோட்டுக்கு வந்ததாகவும் அங்கு முன்தினம் ரவிச்சந்திரன் என்பவர் இந்தியன் மெடிக்கல் ஸ்டோர் முன்பு வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து வடலூர் காவல் ஆய்வாளர் விசாரித்து கொண்டு இருந்தாகவும் அவர் சம்பவ இடத்தை படம் வரைந்து மகஜர் தயார் செய்ததாகவும் மேலும் அங்கு இருந்து கைபற்றப்பட்ட TN 91Y 9679 என்கின்ற Scooty வாகனத்தைதயும் இரத்தம் படிந்த இரத்தம் படியாத சிமென்ட காரை மண் ஆகியவற்றை மகசரில் கைப்பற்றியதாகவும் அந்த மகசரில் நானும் விஜயனும் கையொப்பம் செய்ததாகவும் பின்னர் 02.06.2017 அன்று வடலூர் காவல் ஆய்வார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க நானும் எனது நண்பர் பிரபாகரன் என்பவரும் வடலூர் காவல் நிலையத்திற்கு சென்றதாகவும் அங்கு கைது செய்து வைக்கப்பட்டிருந்த முதல் எதிரி அருள்பாண்டியன்

தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்ததாகவும் அவர் தன்னை அழைத்து சென்றால் வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய வீச்சு அறுவாள் மற்றும் TN 31 AX 2967 என்கின்ற TVS MOPED வாகனத்தை ஒப்படைப்பதாக கூறி அவர் அழைத்து சென்ற ஐய்யனார் கோவில் தைலமரம் தோப்பில் இருந்து மேற்கூறிய பொருட்களை அவர் மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து ஆஜர் செய்ததாகவும் அதனை ஆய்வாளர் மகசரில் கைபற்றியதாகவும் மேற்படி மகசரில் முதல் சாட்சியாக நான் கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு உதவி வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*